செய்தி வெளியீடு எண்.784 நாள்.31.10.2009

# அரசு மருத்துவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அளித்தமைக்காக தமிழ் நாடு அரசு டாக்டர்கள் சங்க நிர்வாகிகள் முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தனர்

தமிழ் நாடு அரசு டாக்டர்கள் சங்கம், அரசு டாக்டர்களுக்கு மைய அரசுக்கு இணையாக பதவி உயர்வு வழங்கக்கோரியதன் அடிப்படையில், அதுகுறித்து ஆராய தமிழக அரசு ஒரு குழுவை அமைத்திருந்தது. அக்குழு அரசுக்கு வழங்கிய பரிந்துரைகளை ஏற்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு அரசு மருத்துவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அளித்தும், பணியிடங்களை உருவாக்கியும் 23.10.2009 அன்று ஆணையிட்டார்கள்.

இந்த ஆணை பிறப்பித்தமைக்காக மிகுந்த மகிழ்ச்சியோடு தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் டாக்டர் எஸ்.கனகசபாபதி, செயலாளர் டாக்டர் செந்தில், துணைத் தலைவர்கள் டாக்டர் ஏ.அருள்சாமி, டாக்டர் லியாகத்அலி, பொருளாளர்கள் டாக்டர் கே.பிரகாஷ்கரத், டாக்டர் வி.ஜெயக்குமார், இணைச் செயலாளர்கள் டாக்டர் ஏ.இளங்கோவன், டாக்டர் பொன்ராஜ், சங்கத்தின் தலைமை நிலையச் செயலாளர் டாக்டர் வி.பழனி, இதழ் பதிப்பாசிரியர் டாக்டர் எஸ்.சோமசுந்தரம், செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் ரமேஷ், டாக்டர் சிவராம கண்ணன், டாக்சர் சீனிவாசன் மற்றும் டாக்டர் வசந்தி ஆகியோர் முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (31.10.2009) சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ்.விநாயகம் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9